தினகரன் 3
சென்னை 20 ஜனவரி 2010

## ராமச்சந்திரா பல்கலை.யில்

# சமூக மருத்துவ இயல் பாடப் பிரிவு தொடக்கம்

**சென்னை, ஜன.20:** போரூர் ராமச்சந்திரா பல்கலைக்கழகம், கலிபோர்னியாவில் உள்ள பெர்கிலி பல்கலைக்கழகம் இணைந்து, சமூக மருத்துவ இயல் 2 ஆண்டு பட்ட மேற்படிப்பை முதன் முதலில் தமிழகத்தில் அறிமுகப்படுத்துகின்றன.

இதற்கான ஒப்பந்தம் ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் நேற்று கையெழுத்தானது. நிகழ்ச்சிக்கு, ராமச்சந்திரா பல்கலை. வேந்தர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். இணை வேந்தர் எஸ்.பி.தியாகராஜன், பெர்கிலி பல்கலை. சமூக மருத்துவத் துறை தலைவர் ஸ்டீபன் எம்.ஷார்டெல் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.